**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>OS.No. 99/2016</u>**

<u>முன்னிலை – எஸ். கோபிநாதன், பி.எஸ்ஸி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் நாள் புதன்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சரவணன் | தந்தை பெயர் | : | திரு.இளையபெருமாள் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 09.07.2025

**P.W. : 1**

**<u>1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

| | |
|---|---|
| கேள்வி | 2 வது பிரதிவாதி நிறுவனம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது தரப்பினராக சேர்க்கப்படாமல் பின்னால் சேர்க்கப்பட்டது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 2 வது பிரதிவாதி நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் 1 வது பிரதிவாதி பிருந்தா பெயரில் இருந்து உள்ளது என்றால்? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | 1 வது பிரதிவாதி பெயரில் மேற்படி 2 வது பிரதிவாதி நிறுவனம் தனிப்பட்ட சொத்தாக அனுபவித்து வருகிறார் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 2 வது பிரதிவாதிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் நீங்களும், சகோதரிகளும் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்? |
| பதில் | இல்லை. |

| | |
|---|---|
| கேள்வி | வாதிகள் பல வழக்குகள் 2 வது பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளீர்கள் ஆனால் தற்பொழுது இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | மேற்படி 2 வது பிரதிவாதி நிறுவனமானது ஆரம்பத்தில் எனது சகோதரரான ராஜராஜன் என்பவரின் பெயரில் இருந்தது என்றால்? |
| பதில் | ஆரம்பத்தில் அவர் பெயரில் இருந்தது. |
| கேள்வி | அவர் இறந்த பிறகு அவரின் முதல் வகுப்பு வாரிசுகளுக்கு மட்டும் சொந்தமானது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்கள் பெயரிலும் உங்கள் தம்பி ராஜராஜன் பெயரிலும் ஜெயமங்கலத்தில் வீட்டு மனைகள் இருந்ததா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | இந்த வழக்கு பரிகாரம் படி நீங்கள் பல சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 2014 டிசம்பர் மாதம் மேற்படி 2 வது பிரதிவாதி நிறுவனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால்? |
| பதில் | 2014 டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. |
| கேள்வி | மேற்படி நிறுவனமானது டிசம்பர் 2014 க்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும்? |
| பதில் | சரியல்ல. |

வேண்டுகோளுக்கு இணங்க 1 வது பிரதிவாதியின் குறுக்கு விசாரணை 08.08.2025 ம் தேதியன்று ஒத்திவைக்கப்பட்டது.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 09.07.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

ஒம்/- எஸ்.கோபிநாதன்

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 09.07.2025